# நகரத்தார் சடங்குகள்

(வெளிநாட்டில் இருப்போர்க்கேற்ற ஒரு தொகுப்பு)

# நன்றி

உமையாள் ஆச்சி சங்கரலிங்கம்

அருண் நாச்சம்மைஆச்சி

வசந்தா நாராயணன்

டாக்டர் சுப.திண்ணப்பன்

# நகரத்தார்களின் முக்கிய சடங்குகள்

1 திருமணம் ........................................ 2

2. திருமணச் சடங்குகள் - ஒரு சிறு விளக்கம் ........................................ 10

3 தீர்த்தம் குடித்தல் ........................................ 15

4 பிள்ளைப் பிறப்பு ........................................ 15

5 பெண் பூப்பெய்துதல் ........................................ 16

6 புதுமனை புகுதல் ........................................ 17

7 பொங்கல் விளக்குச் சட்டி ........................................ 18

8 பிள்ளையார் நோன்பு ........................................ 19

9 இறப்பு ........................................ 20

# 1 திருமணம்



### பெண்/ மாப்பிள்ளை பார்க்கப் போவது

கிழமை ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளி

திதி அஷ்டமி, நவமி தவிர்த்த மற்ற திதிகள், கரிநாள் நீங்கலாக.

நேரம் ராகு காலம், எமகண்டம் நீங்கலாக.

**கல்யாணம் பேசிக் கொள்வது** நல்ல நாளில், நல்ல நேரத்தில் இரு வீட்டாருக்கும் ஏற்றாற்போல் சுமூகமாய்ப் பேசி முடிக்கின்ற சொற்தக்காரர்கள்/ பெரியவர்களைக் கூட்டிச் செல்ல வேண்டும். பொதுவாக மாப்பிள்ளை வீட்டில் பேசிக் கொள்வது வழக்கம்.

### பெண் வீட்டார் கொண்டு செல்ல வேண்டியவை.

| | | |
|---|---|---|
| விரளி மஞ்சள் 5, | ஆப்பிள் 5, | குங்கும டப்பா, |
| வெற்றிலை கவுளி 1, | ஆரஞ்சு 5, | சந்தனம், |
| பாக்கு 300கிராம், | சங்கிஸ்ட் 5, | எலுமிச்சம் பழம் 5. |
| கல்கண்டு 300கிராம், | தேங்காய் 5, | |
| வாழைப் பழச் சீப்பு 5, | மல்லிகைப் பூ முழம் 10, | |

மேற்கண்ட பொருட்களை எவர் சில்வர் தாம்பாளத்தில் கொண்டு வந்து ஹாலில் அல்லது சாமி அறையில் வைக்க வேண்டும். மாப்பிள்ளை வீட்டில், சாமி அறையில் விளக்கேற்றி படங்களுக்கும் பூச்சரம் சாத்தியிருக்க வேண்டும்.

கல்யாணம் பேசி முடித்ததும் அதன் விவரத்தை எழுதி இரு பிரதிகள் எடுத்து வெற்றிலை பாக்குத் தாம்பாளத்தில் வைத்து பெண்ணின் தகப்பனார் மாப்பிள்ளையின் தகப்பனாருக்கும், மாப்பிள்ளையின் தகப்பனார் பெண்ணின் தகப்பனாருக்கும் கொடுத்துப் பிறகு சாமி அறையில் வைத்துக் கும்பிட்டு இருவரும் எழுதிய பிரதிகளில் ஒன்றை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

பெண் வீட்டாருக்கு 2 தாம்பாளத்தில் பழங்களில் விதத்திற்கு 2 வீதம் வைத்து ஒன்றைப் பெண் தகப்பனாருக்கும், மற்றொன்றைப் பெண் தாயாருக்கும் கொடுக்கலாம். பின் முறைகளைத் தவிர்ப்பது நல்லது.

திருமணத்திற்கு நாள் பார்ப்பவர்களிடம் மாப்பிள்ளை அழைத்தல், திருப்பூட்டுதல், பெண்ணழைத்தல் ஆகியவற்றிற்கு நேரம் குறித்து வாங்க வேண்டும். மாப்பிள்ளை அழைக்கும் நேரம் திருப்பூட்டுவதற்கு ஒரு மணி நேரம் முன்பாக இருந்தால் நல்லது.

ஹாலுக்கு 3 அல்லது 4 மாதத்திற்கு முன்பே தேதி பதிவு புக் செய்து காரியக்காரரிடம் உடையவர்களே போய்ச் சொல்ல வேண்டும். கோவில் மேளத்திற்கும் முன்னதாகவே சொல்லி விடவும்.

ஒரு மாதத்திற்கு முன் ஊருக்குச் சொந்தக்காரர்களுக்கு எழுதி நகரக் கோவிலிலும், உள்ளூர்க் கோவிலிலும் பாக்கு வைக்கச் சொல்லி இவ்விடம் திருமணம் நடக்கும் கோவில் காரியக்காரருக்கு அவர்கள் சார்பாகக் கோவில் மாலை, விபூதிப் பிரசாதம் கொடுக்கும்படி இரு வாரங்களுக்கு முன்பே எழுதி வாங்கி அந்தக் கடிதத்தைச் சொந்தக்காரர்களே பதிவுத் தபாலில் சேர்ப்பிக்கச் செய்ய வேண்டும். நகரத்தார் மேற்பார்வையில் இல்லாத கோயில்கள் உள்ள இடத்தில்

கல்யாணம் நடந்தால் நேரடியாகவே உரியவர்களுக்கு விபூதிப் பிரசாதம் அனுப்பும்படி செய்யவேண்டும்.

முதலில் நல்ல நாளில் மாமியார், தாயார், மகள், மகன், மாமக்காரர், சடங்குகாரர் ஆகிய முக்கிய சொந்தக்காரர் வீடுகளில் முன் கூட்டியே கல்யாணம் சொல்ல வேண்டும்.

### திருமணத்திற்கு முன் இரு நாட்களில் செய்ய வேண்டியவை

திருமணத்திற்கு இரு நாட்கள் முன்பாக இரவு சைவமாகச் சமைத்து, சாமி அறையில் உள்ள சாமி படங்களுக்குப் படைத்து, தேவாரங்களைப் படித்து, வழக்கம் போல் ஊர் சுவாமிகளுக்குப் பணம் முடிந்து வைத்துத் திருமணம் நன்கு நடைபெற வேண்டிக் கொள்ள வேண்டும்.

சாமி கும்பிட்டதும், மாமக்காரர் அல்லது அத்தை அவரவர் வீட்டு வழக்கப்படி பெண்ணிற்கு நகைகள் போட்டு விட வேண்டும். மாப்பிள்ளைக்கு கால் மிஞ்சி போட வேண்டும்.

அன்று காலையில் நவதானியங்களை (600கிராம்) எல்லாம் சேர்த்து ஊறப்போட வேண்டும். அடுத்தநாள் சிவப்புத் துணியில் முடிய வேண்டும். கோவிலில் சொல்லிக் கிழுவைக் கம்பு, அரசாணிக்கால் கட்ட அரச இலை, மாஇலை தயார் செய்யச் சொல்ல வேண்டும். மனை போடச் செங்கல், களிமண் வகையறாவும் தயார் செய்ய வேண்டும்.

சூலம், ராகுகாலம், கரிநாள், அஷ்டமி, நவமி தவிர்த்த நல்ல நேரத்தில் மாப்பிள்ளை வீட்டார் திருமணம் நடக்கும் ஊருக்கு வந்து ஏற்பாடு செய்திருக்கும் இடத்தில் தங்க வேண்டும்.

### திருமணத்திற்கு முதல் நாள்

மண்டபத்திற்கு கொண்டு செல்ல வேண்டிய சாமான்கள் விபரம்

1.நிலை விளக்கு,

2.சிலேட்டு விளக்கு,

3.திரி 3,

4.விளக்கிற்குக் தேங்காய் எண்ணைப் போத்தல் 1,

5.விபூதி,

6.விளக்கு நூல் திரி,

7.சந்தனப்பேலா, பன்னீர்ச் செம்பு, குங்குமச் சிமிழ் செட் 2,

8.மணவறைக்கு விரிக்க இரத்தினக் கம்பளம்,

9.மணவறைத் தடுக்கு 3, அறைக்குள் விரிக்கும் பாய் 1,

10.மாற்றுக்கட்ட 8 முழம் பழைய வேஷ்டி 3,

11.பழைய துணி,

12.குட்மார்னிங் டவல் 2,

13.விசிறி 2,

14.ஆலத்தி எடுக்க வட்டத் தட்டு 2,

15.தென்னங்குச்சியில் 8 முழ வேஷ்டித் துணியின் ண அங்குல அகலத்தைக் கிழித்துச் சுத்திய குச்சி எ 20. குச்சியின் உயரம் சுமார் 6 அங்குலம். துணீ சுத்தியதை நடுவில் மடித்து ஆலத்தி சோற்றில் வைத்தால் அது ஒரு திரி.

16. நெருப்புப்fபெட்டி 2,

17.கோலத்திற்கு ண கிலோ பச்சரிசி ஊறப்போட்டு அறைத்து வர வேண்டும்.அத்துடன் சிறிதளவு மைதாமாவு சேர்த்துக் கோலம் போடலாம். மா கரைப்பதற்கு ஒரு வாளியும், கோலம் போடக் கிண்ணங்களும், வேட்டித்துணியும் எடுத்துச் செல்ல வேண்டும்.

18. பொங்கல் இட கரி அடுப்பு, அடுப்புக் கரி, செம்பு, சட்டி, கரண்டி.

19. டிபன் காரியர் செட் எ 1.

20. மாமக்காரருக்குப் பட்டு 2.

21. பணம் எழுதியது முடிய ஒரு சிவப்புப் பட்டு (1மீட்டர்) மேற்படி பட்டை குலம் வாழும் பிள்ளை எடுக்கும் சமயம், அரசாணிக்காலைச் சுற்றும் சமயம் உபயோகப் படுத்தலாம்.

22. காப்புக் கட்டச் சிவப்புத்துணி 1 1/2ஏ அகலம்,15ஏ நீளத்தில், இரண்டு முனை முறியாத விரளி மஞ்சள்.

5. கல்யாண அறையில் விளக்கு ஏற்றி சங்கு ஊதி, தும்பு பிடித்து பின் வரும் இடங்களில் கோலம் போட வேண்டும். 1. அறையில் நடு வீட்டுக் கோலம், 2. மணவறையில் கோலம், 3. ஆலத்தி எடுக்கும் இடத்தில் நடு வீட்டுக் கோலம்.

6. பெண் வீட்டுப் பங்காளிகள் அரசாணிக்கால் வைக்கும் மரக்குழியில் பவளம் போட்டு, பால் ஊற்றி, சங்கு ஊதி கிழுவை அல்லது ஒரு கம்பை ஊற்றி அந்தக் கம்பு தெரியாமல் மாவிலை அரச இலைக் கொப்புகளை வைத்து பச்சைக் கலர் பிளாஸ்டிக் ரபியாவால் கட்ட வேண்டும். முளைப் பாலிக்கு அரச இலை அல்லது மாவிலை வைத்துக் கட்ட வேண்டும்.

7. குழைத்த மண்ணைப் பெண் வீட்டார்களும், சொந்தக்காரர்களும், வந்திருக்கும் எல்லாப் பெண்களும் அறைக்கதவிற்கு நேரே மணை வைக்கும் இடத்தில் ஒவ்வொருவரும் சிறிது மண் வைக்க வேண்டும். பிறகு ஒவ்வொருத்தரும் ஒரு செங்கலாக 7 செங்கல் வைத்து 2 சுமங்கலிகள் மனையை எடுத்து அந்த இடத்தில் வைக்க வேண்டும்.

8. இசைபிடிமானம் தயார் செய்து கொள்ளுதல் ( நகல் பின்னிணைப்பு).

## திருமணத்தன்று

1. பெண்ணைக் காலையில் குளிக்கச் சொல்லி ஒரு சரமாலையைப் போட்டு விடவும்.

பெண்ணின் அயித்தை/அப்பத்தாள் பூரம் கழிக்க வேண்டும். பூரம் கழிக்க வேப்பிலையை ஏழு இடத்தில், தலை 1, தோள் 2, இடுப்பு 2 பக்கம், பாதம் 2, வைத்து குச்சியால் தட்டி விட வேண்டும். பூரம் கழித்து முடிந்ததும் பெண்ணைத் திரும்பக் குளிக்கச் சொல்ல வேண்டும்.

2. திருமண நேரம், ஊர்த்துaரம், கார் டிராபிக், ராகு காலம், எமகண்டம், சூலம் முதலானவற்றை அனுசரித்து 2 மணி நேரம் முன்பாகப் பெண் திருமண மண்டபத்திற்கு

வந்து சேரத் தோதாய்ப் புறப்பட வேண்டும்.

3. பெண், மாமக்காரர், பெற்றோர் வீட்டில் சாமி கும்பிட்டு விபூதி பூசிப் புறப்பட வேண்டும். புறப்படும் சமயம், நகைகள் போடும் சமயம் மேள வாத்திய டேப் ரெக்கார்டு இசைக்கலாம்.

4. மண்டபத்திற்கு வந்ததும், கோவில் மாலையைப் பண்டாரம் கொண்டு வருவதை சங்கு ஊதி வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

5. மாப்பிள்ளை அழைப்பிற்கு முன் பெண்ணிற்கு பகவத்தியானம் (பகவணம்)f செய்தல். (ஊரில் மாப்பிள்ளை வீட்டில் மாப்பிள்ளைக்குப் பகவணம் செய்வார்கள்.)

6. பகவுத்தியானம். (ஐயர் செய்தல்)

விக்னேஸ்வர பூஜை, வருண கும்ப பூஜை- பெண் கோவில் மாலை போட்டுக்கொண்டு மணவறையில் அமரவேண்டும்.

7. ரக்ஷa பந்தனம் (காப்புக் கட்டுதல்)

ஐயர் மஞ்சள் கயிற்றாலும், பெண்ணின் மாமக்காரர் காசு முடிந்த சிவப்புத் துணியாலும் பெண்ணின் இடது கையில் கட்டுவது.

8. மணமிடுதல்- முதலில் மாமக்காரரும் பிறகு பங்காளிகள் (ஆண்கள்) ஒவ்வொருவரும் முளைத்த நவதானியத்தில் கொஞ்சம் எடுத்து ஐந்து முளைப்பாலிகையிலும் சிறிது வைக்க வேண்டும். பிறகு இரண்டு கைகளிலும் பூக்களை எடுத்துக் கொண்டு பெண் முழங்கால்கள், முழங்கைகள், தோள்கள் அருகாமையில் மூன்று முறை கொண்டுபோய் வாழ்த்திய பிறகு பெண்ணிற்குப் பின்புறம் பூக்களைப் போட வேண்டும். (பூ மணமிடுதல்)

9. ஐயர் பெண்ணிற்கு காளாஞ்சி கொடுத்ததும், பெண்ணை அறைக்குள் சௌகரியமாக இருக்கச் சொல்ல வேண்டும்.

## மாப்பிள்ளை அழைப்பு

1. தங்கியிருக்கும் வீட்டில் சுவாமி கும்பிட்டு, விபூதி பூசி, மாப்பிள்ளை அழைக்கும் நேரத்துக்கு அரை மணி நேரம் முன்னதாகக் கோயிலுக்குப் போய்ச் சேரும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். ராகு காலம், எமகண்டம் ஆகியவற்றைத் தவிர்த்துப் புறப்பட்டு வரவேண்டும். புறப்படும் சமயம் மேள வாத்திய டேப்ரிக்கார்டு வாசிக்கச் செய்யலாம். கோயிலுக்கு வந்ததும் திண்ணையில் தன் மாமக்காரர், பெற்றோருடன் கிழக்கு முகமாக இருந்து கொள்ள வேண்டும்.

2. மாப்பிள்ளை வீட்டார் வீட்டிலிருந்து வரும்போது பெண்ணுக்குத் திருப்பூட்டுகிற சேலை, திருமாங்கல்யம், விபூதி, மஞ்சள், குங்குமம், வெற்றிலை பாக்கு, எலும்பிச்சம் பழம் 2, பூமாலை 1ம் ஒரு தாம்பாளத்தில் வைத்து மாப்பிள்ளையின் தாயாரோ, சகோதரியோ கொண்டு வர வேண்டும். ஒரு வெள்ளிச் சட்டியிலோ அல்லது எவர்சில்வர் சட்டியிலோ மஞ்சள் தடவிய தேங்காய் 2,

வெற்றிலை பாக்கு, மஞ்சள் அல்லது சிவப்பு பட்டுத்துண்டு (பட்டுத்துண்டு எ வீட்டு வழக்கத்தை அனுசரிக்கவும் ) வைத்து தகப்பனார் அல்லது சகோதரர் கொண்டு வர வேண்டும்.

மாப்பிள்ளைக்குப் பட்டு, தலைப்பாகை, மிஞ்சி மாமக்காரருக்குப் பட்டு முதலியவை வாங்கிக்கொள்ள வேண்டும்.

3. பெண் வீட்டார் மாப்பிள்ளை அழைக்கப் போகும்போது மாப்பிள்ளைக்கு வேட்டி, துண்டு ( சங்கிலி, மோதிரம், கெடிகாரம் பேசிக்கொண்டீருந்தால் ) விபூதிப் பை, வெற்றிலை பாக்கு, எலுமிச்சம்பழம் 2, பூ மாலை 1, பூச் செண்டு 1, முதலியவை வைத்துப் பெண்ணின் தகப்பனார், ஐயா அல்லது சகோதரர் கொண்டு செல்ல வேண்டும். மாப்பிள்ளை வரும்போது ஆலத்தி எடுக்கத் தயாரித்து வைக்க வேண்டும்.

## ஆலத்தி தயாரிக்கும் விதம்.

சோற்றில் மஞ்சள் சுண்ணாம்பு சேர்த்துப் பிசைந்து சதுரமாக ஒன்றும் பிள்ளையார் பிடிப்பது மாதிரி 2ம், (சுஓநுE SHAகூE ) அதில் முன்பு துணி சுத்தி வைத்திருக்கும் குச்சியை நடுவில் மடித்து சதுரத்தில் 4 திரியும் மற்றதில் ஒவ்வொரு திரியும் வைக்க வேண்டும்.

4. மேள வாத்தியத்துடன் எல்லோரையும் கூட்டிச் சென்று பெண்ணின் தகப்பனார் மாப்பிள்ளைக்கு விபூதி பூசி நகைகள் போட்டு, மாலை போட்டு ( வேஷ்டி துண்டும் தோளில் போட்டு ) கோவிலுக்குள் சென்று ஒரு பிரகாரம் வந்து அழைத்து வர வேண்டும்.

5. மாப்பிள்ளை அழைத்து வரும்போது மாப்பிள்ளை தகப்பனார் தேங்காய்ச் சட்டியும், தாயார் திருப்பூட்டுகிற தாம்பாளமும், சகோதரி பால் செம்பின் மேல் கெண்டிச் செம்பும் வைத்துக் கொண்டு வர வேண்டும். (பால் செம்பில் பால் ஊற்றிக் கொண்டு வரவேண்டும்) விதைக் கொட்டை நெல் சிகப்புத் துணியில் கட்டி, வைக்கோல்பு<ரி சுற்றி மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வரவேண்டும். மணவறை முடிந்ததும் மணமக்கள் அறைக்குள் செல்லும்போது அதை வாசற்படிக்கு அருகில் வைத்து தாண்டிச் செல்லும்படி சொல்ல வேண்டும்.

6. மாப்பிள்ளை அழைத்து வரும்போது ஹாலிற்குள் நுழைந்தவுடன் பெண்ணிற்கு அயித்தை/ அப்பத்தாள்/ ஐயா/ தகப்பனார் சிலேட்டு விளக்கு வைத்து மாப்பிள்ளைக்கு ஆலத்தி எடுத்து விபூதி பூசி மாப்பிள்ளையை வரவேற்கவும்.

7. மாப்பிள்ளையை ஹாலில் கிழக்கு முகமாக உட்காரச் சொல்ல வேண்டும்.

8. மாப்பிள்ளை வீட்டார், தலைப்பிள்ளை கல்யாணமாயிருந்தால் மாம வேவு இறக்க வேண்டும்.

9. மாப்பிள்ளைக்கு பகவத்தியானம் செய்ய வேண்டும். (ஐயர் பூஜை, மாப்பிள்ளைக்கு வலது கையில் காப்புக்கட்டுதல், பூ மணம் இடுதல்) பூ மணம் இடும் சமயம் ஐயர் நவக்கிரக ஹோமம் செய்ய வேண்டும்.

10. தலைச் சேலையில் முடிதல், அவரவர்கள் வழக்கப்படி, பெண் தகப்பனார் மாப்பிள்ளை தலைப்பாகையில் வைத்த பணத்தை மாப்பிள்ளை வீட்டார் எடுத்துக் கொள்ள வேண்டும்.

11. ஐயர் மாங்கல்ய பூஜை செய்து மாப்பிள்ளைக்குக் காளாஞ்சி கொடுத்ததும், மாப்பிள்ளை சௌகரியமாக ஹாலில் கிழக்கு முகமாக உட்கார்ந்து கொள்ள வேண்டும். ஐயரை கோவிலில் இருக்கச் சொல்லி தாலி கட்டி முடித்ததும் மணவறைச் சடங்கிற்குக் கூப்பிட வேண்டும்.

12. திருமாங்கல்யத்தை பெரியவர்களிடம் கொடுத்து ஆசிர்வாதம் பெறுதல். ஆண்களிடம் பெண்ணிற்கு மாமக்காரரும், பெண்களிடம் மாப்பிள்ளைக்கு சகோதரியும் ஆசிர்வாதம் பெற்றுவர வேண்டும்.

13. பெண்ணிடம் மாமியார்/நாத்தனார் திருப்பூட்டுகிற சேலையைக் கொடுத்துக் கட்டிக்கச் சொல்லுதல். திருப்பூட்டுகிற சேலை நிறம் சிவப்பு அல்லது மஞ்சள். சேலையில் கருப்புக் கலர் சேராதிருப்பது நல்லது.

## திருப்பூட்டுதல்

1. பெண்ணை முதலில் மாமக்காரர் கூட்டிவந்து கிழக்கு முகமாக மணவறை மேல் நிற்கச் சொல்ல வேண்டும். பெண் தன் இரு கைகளிலும் தேங்காய், வெற்றிலை பாக்கை வைத்துக் கொள்ளச் சொல்ல வேண்டும்.

2. மாப்பிள்ளையை மாமக்காரர் கூட்டி வந்து , பெண்ணிற்கு நேரே தடுக்குப் போட்டு நிற்க வைத்து மாப்பிள்ளை திருப்பூட்ட வேண்டும். ( கழுத்துரு என்றால் 3 முடிச்சுப் போட வேண்டும். அல்லது தாலிச் சங்கிலியை இரண்டு கைகளாலும் பெண்ணிற்கு அணிவித்தல் ).

3. மாப்பிள்ளை பெண்ணின் நெற்றியில், தாலியில், கழுத்துக்குப் பின்புறம் தாலிச் சங்கிலியில் அல்லது முடிச்சில் குங்குமம் தொட்டு வைக்க வேண்டும்.

4. மாப்பிள்ளை பெண்ணிற்கு மாலை போட வேண்டும்.

பெண்ணின் கையில் உள்ள வெற்றிலை பாக்குத் தேங்காயை மற்றவர்கள் வாங்கி வைத்துக் கொண்டதும் பெண் மாப்பிள்ளைக்கும், மாப்பிள்ளை பெண்ணிற்கும் 3 தடவை மாலை மாற்ற வேண்டும். தம்பதிகள் கல்யாண அறைக்குள் சென்று விளக்கைக்ிf கும்பிட்டு, வந்திருக்கும் மற்ற பெரியவர்களையும் வணங்கி ஆசீர்வாதம் பெற்ற பின் ஹாலில் வந்து அமரவேண்டும்.

5. பகல் விருந்து எ நேரத்தைப் பொருத்து எல்லோருக்கும் பகல் விருந்து நடத்தலாம். மணி

10.30 க்குள்ளாக இருந்தால் இசைபிடிமானம் முடித்துச் சாப்பிட ஆரம்பிக்கலாம்.

6. திருப்பூட்டும் சடங்கு மாப்பிள்ளையின் தாயார்/ சகோதரி செய்தல்.

சாமான்கள் எ ஒரு சிறு வட்டத்தட்டில் 7 கிண்ணங்கள்.

(பாக்கு, விபூதி, மஞ்சள், பச்சரிசி, உப்பு, புளி, பஞ்சு.)

நிறைநாழி, கெண்டீச் செம்பு.

பெண் கிழக்கு முகமாக மணவறை மேல் நிற்க வேண்டும். எதிரில் தடுக்குப் போட்டு நின்று மாமியார் முதலில் விபூதியைப் பூசிக்கொண்டு பெண்ணிற்கும் பூச வேண்டும். பிறகு ஒவ்வொன்றாகத் தொட்டு கழுத்தில் வைத்துக்கொண்டு பெண்ணிற்கும் தொட்டு வைத்தல். ஒவ்வொரு சாமானும் 3 முறை. மொத்தம் 21 முறை. மேற் கண்ட சடங்கு செய்யும்போது, ஒரு பெண் ஏற்றிய சிலேட்டு விளக்கை வைத்துக் கொள்ளவும். சடங்கு முடிந்ததும் சடங்குக்காரர் நிறை நாழியை கையில் வைத்துக்கொண்டு கெண்டிச் செம்புத் தண்ணீரைப் பெண்

கையில் வைத்திருக்கும் வெற்றிலையில் ஊற்றியதும் பெண் அதைத் தன் பாதத்தில் விட்டு வெற்றிலையின் நுனியால் தன் நெற்றியைத் தொட வேண்டும். இவ்வாறு 3 முறை செய்தல் வேண்டும். பிறகு பிள்ளையை (வெள்ளியால் செய்த அம்மிக் குழவி) வைத்துக் கொண்டு 3 முறையும்,சிலேட்டு விளக்கு வைத்துக்கொண்டு 3 முறையும் தண்ணீர் விட்டு முன்பு போல் பாதத்தில்விட்டு நெற்றியில் தொட வேண்டும்.

2. புது மணத் தம்பதிகள் விருந்தினரை நோக்கி வணங்கி பின் அலங்கார மணவரையில் உட்காருதல். (எப்பொழுதும் ஆணிற்கு வலது பக்கத்தில்தான் பெண் இருக்க வேண்டும்.)

3. முன் தயாரித்து வைத்திருக்கும் இசைபிடிமானத்தில், கல்யாண அறையில் இருவரின் தகப்பனாரும் கையெழுத்துச் செய்தல். வருஷம், மாதம், தேதி, கல்யாண விபரம் எழுதி, இரண்டு நோட்டுப் புத்தகங்களில் முதல் பக்கத்தில் மாமக்காரர், சொந்தக்காரர்களுக்கு இடம் விட்டு மற்றவர்கள் விருப்பம் போல் பெண் வீட்டிற்கும் மாப்பிள்ளை வீட்டிற்கும் பணம் எழுதுதல்.

**மணவறை**

1. மாப்பிள்ளை, பெண்ணை மாமக்காரர் கூட்டி வந்து மணவறையில் இருக்கச் சொல்ல வேண்டும்.

2. ஐயர் விக்னேஸ்வர பூஜை, வருண கும்ப பூஜை, நவக்கிரக ஹோம பூஜை செய்தல்.

3. பூ மணம் இடுதல். நவ தானியத்தை சிறிது பாலிகையில் நிரப்பி, சில பூக்களை எடுத்துக்கொண்டு, மாப்பிள்ளைக்கு முதலிலும் அடுத்துப் பெண்ணிற்கும் பூ மணம் இடுதல். முதலில் பெண் மாமக்காரர், அடுத்து மாப்பிள்ளை மாமக்காரர், அடுத்து மற்றவர்களும் பூ மணம் இடுதல்.

4. தம்பதிகள் அரசாணிக்காலைச் சுற்றி வருவது. ஐயர் பெண் மாப்பிள்ளை வலது கைகளை (மாப்பிள்ளை கை கீழே பெண் கை மேலே) சேர்த்துப் பட்டுப் போட்டுக் கட்டித் தம்பதிகளை அரசாணி, ஹோமத்தைச் சுற்றி வரச் செய்ய வேண்டும். பிறகு தம்பதிகளை வீட்டிற்குள் உட்கார வைத்து மாமக்காரர்கள் பட்டை அவிழ்க்க வேண்டும்.

5. மணவறைச் சடங்கு ( மாமியார் / நாத்தனார்)

மாமியார் காப்பில் ஒன்றைக் கழட்டி பெண்ணிற்கு வலது கையில் போட்டுச் சடங்கு செய்தல். (திருப்பூட்டும் சடங்கு மாதிரி)

பகல் 12 மணிக்குள் தம்பதிகளைப் பெரியவர்கள் அழைத்துச் சென்று கோவிலில் சுவாமி கும்பிட்டு, அர்ச்சனை செய்து வாங்கிய பிரசாதத்தை மாப்பிள்ளையிடமிருந்து பெண் கும்பிட்டு வாங்கிக் கொண்டு இருவரும் உண்டியலில் பணம் போட்டு மண வாழ்க்கை நன்கு அமைய இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்.

6. அரசாணிப் பொங்கல்

அரசாணிக்குப் பெண்கள் வெண் பொங்கல் இடுவது.

7. கும்பிட்டுக் கட்டிக்கொள்வது

கோவிலில் இருந்து வந்ததும் தம்பதிகள் மணவறையில் அமர வேண்டும். பெற்றோர், உற்றார், உறவினர்கள் வாழ்த்துப் பரிசுகள் அளித்தல். பெற்றோர்களைத் தம்பதிகள் இருவரும் விழுந்து கும்பிட வேண்டும். மாமியாரை மாப்பிள்ளை கும்பிடுவதில்லை.

8. மஞ்சள் நீர் ஆடுதல்

மாப்பிள்ளையும் பெண்ணும் முறைக்காரர்களும் மஞ்சள் நீரைச் சிறிது தொட்டு வைத்துக் கொள்வது.

9. காப்புக் கழற்றிக் கால் மோதிரம் இடுதல்

முன்பு மணவரைச் சடங்கில் மாமியார் போட்ட காப்பைகீ கழட்டி மாமியார் போட்டுக் கொண்டு பெண்ணிற்கு இரண்டு கால்விரல்களிலும், இரண்டாவது விரலில் கால் மோதிரம் போட்டுக் கல்யாண அறைக்குள் மாமியார்/நாத்தனார் சடங்கு செய்ய வேண்டும்.

10. பிள்ளை எடுக்கிக் கொள்வது

கல்யாண அறையில் தகப்பனார், மாமனார், மாமக்காரர், மற்றும் பெரியவர்களிடம் மணப்பெண் பிள்ளையைக் (வெள்ளியால் செய்த குழவி) கொடுத்து கும்பிட்டு வாங்கிக் கொள்வது.

11. காப்பு அவிழ்த்தல்

கல்யாண அறைக்குள் பெண் காப்பைப் பெண் மாமக்காரரும், மாப்பிள்ளை காப்பை மாப்பிள்ளை மாமக்காரரும் அவிழ்த்தல்.

12. அரசாணியை அவிழ்த்தல்

பெண் வீட்டுப் பங்காளிகள் அரசாணியை அவிழ்த்தல். அரசாணிக்காலில் உள்ள பவளத்தை மறக்காமல் எடுக்க வேண்டும்.

13. பெண் சொல்லிக் கொள்ளுதல்

பெண் அழைக்கு முன் பெற்றோரிடமும், உறவினர்டமும் பெண் வெற்றிலை பாக்குடன் கும்பிட்டு விழுந்து சொல்லிக் கொள்ளுதல்.

14.பெண் அழைத்தல்

பெண் வீட்டு வழக்கப்படி, சிறு சட்டியில் பாக்கை நிரப்பி, இரண்டு வெற்றிலை பாக்கு வைத்து அதன் மேல் குலம் வாழும் பிள்ளையை வைத்துப் பெண்ணின் கையில் கொடுக்க வேண்டும்.

தகப்பனார்கள் இருவரும் தேங்காய்ச் சட்டியை வைத்துக் கொள்ள வேண்டும்.

பெண் அழைத்துப் போகும்போது தம்பதிகளுக்கு பெண்ணின் அப்பத்தாள்/ அயித்தை/தகப்பனார் சிலேட்டு விளக்ளை வைத்து ஆலத்தி எடுக்க வேண்டும். இருவருக்கும் விபூதி பூச வேண்டும். மேள தாளத்துடன் பெண்ணையும் மாப்பிள்ளையையும் மற்றவர்களுடன் அழைத்துச் செல்ல வேண்டும்.

15. மாப்பிள்ளை வீட்டிற்கு வருவது (கோவில் ஹால்)

எல்லோரும் பெண் மாப்பிள்ளை தங்கியிருக்கும் ஹாலுக்கு வருதல். மாப்பிள்ளைக்கு அப்பத்தாள், அயித்தை தம்பதிகளுக்கு சிலேட்டு விளக்கு வைத்து ஆலத்தி எடுத்து விபூதி பூசிப் பெண்ணை வரவேற்றல்.

சுவாமி வீட்டிற்குள் சென்று தம்பதிகளும் பெற்றோர்களும் தேங்காய்ச் சட்டியை வைத்துக் கும்பிட்டு பாயில் உட்கார்ந்துவிட்டு வெளியே வருதல்.

16. பெண்ணழைத்த சடங்கு

பெண் மாப்பிள்ளை இருவரும் மணவறைக்கு முன் கிழக்கு முகமாக இரு தடுக்கின் மேல் நிற்றல்.

### பெண்ணிற்கு மாமியார்/நாத்தனார் சடங்கு செய்தல்.

பிறகு தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று திசைகளிலும் பெண்ணையும் மாப்பிள்ளையையும் தடுக்கின் மேல் நிற்கச் செய்து, கெண்டிச் செம்பு தண்ணீரை மூன்று தரம் பெண் வைத்திருக்கும் வெற்றிலையில் விட வேண்டும். பெண் தண்ணீரைப் பாதத்தில் விட்டு வெற்றிலையை நெற்றியில் தொட வேண்டும்.

### குலம் வாழும் பிள்ளை எடுத்தல்

மணவறைக்கு முன் 3 இலை போட்டு முன் இட்ட பொங்கலை (அரசாணிப் பொங்கல்) மூன்று இலையிலும் எடுத்து வைத்துப் பருப்பு நெய் ஊற்றி இலைக்கு நான்கு வாழைப்பழம் வீதம் உரித்து வைக்கவும்.

இரண்டு சட்டி, ஒரு தவலை ஆக மூன்றிலும் தண்ணீர் கொஞ்சம் ஊற்றி வைத்து தவலைத் தண்ணீருக்குள் குலம் வாழும் பிள்ளையை வைக்கவும்.

இரு மாமக்காரர்களும் சிவப்புப் பட்டை 3 பாத்திரங்களுக்கு மேல் பிடித்துக் கொள்ள தம்பதிகள் இரண்டு சட்டியிலும் முதலில் கையை விட்ட பிறகு இருவரும் தவலையில் கையை விட்டு

மாப்பிள்ளை குலம் வாழும் பிள்ளையை எடுத்துப் பெண்ணிடம் கொடுத்ததும் பெண் அதை இடுப்பில் சொருகிக்கொள்ள வேண்டும்.

பெண், மாப்பிள்ளை, பெற்றோர்கள், சகோதரி, மாமக்காரர்கள் ஆகிய எல்லோரும் வீட்டிற்குள் சென்று சுவாமி கும்பிட்டு விபூதி பூசிக் கொண்டு பாயில் இருந்து வெளியில் வந்து அமர வேண்டியது.

பெண் வீட்டார், மாப்பிள்ளை வீட்டார் சாமான்களைச் சரி பார்த்து எடுத்துக்கொள்ள வேண்டியது.

நல்ல நேரம் பார்த்துத் தம்பதிகளை வீட்டிற்கு கூட்டிக் கொள்ள வேண்டும்.

செட்டி முருகனே, தங்கக்கட்டி முருகனே

எங்கும் மங்கலம் பொங்க, இன்பமே சூழ

எல்லோரும் வாழப்

பிரார்த்திக்கிறோம்

***************

# 2. திருமணச் சடங்குகள் - ஒரு சிறு விளக்கம்

1. பாக்கு வைத்தல்

மாப்பிள்ளை வீட்டாரும், பெண் வீட்டாரும் தத்தம் நகரக் கோயில்களுக்குப் பங்காளி ஒருவரை அனுப்பி , மாப்பிள்ளை மாப்பிள்ளை/ பெண் கோயில், பிரிவு, ஊர், முகவரி, திருமணம் நடக்கும் நாள், நேரம் இடம், விலாசம் முதலியவற்றைத் தெள்வாகக் கோயிலுள்ள பாக்கு வைக்கும் பதிவேட்டில் எழுதச் செய்து அதற்குரிய காணிக்கையைச் செலுத்தி வரவேண்டும். திருமணத்திற்கு நகரக் கோயிலிலிருந்து மாலை வந்தால்தான் நகரத்தார் திருமணம் செல்லுபடியாகும். கோயிலில் திருவிளக்குக் காணிக்கை பாக்கியிருந்தால் பாக்கு வைக்கும்போது அதைச் செலுத்த வேண்டும். இக் காலத்தில் திருமணங்களை அரசாங்க அலுவலகத்தில் பதிவு செய்வது போல அக்காலத்தில் நகரத்தார்கள் தத்தம் நகரக்கோயில்களில் பாக்கு வைத்துப் பதிவு செய்யும் பழக்கத்தை மேற் கொண்டுள்ளனர்.

2. பொன் கொடுத்தல்.

மாப்பிள்ளை வீட்டார் கொடுக்கும் பொன் திருமாங்கல்யத்தில் சேர வேண்டும். இசை பிடிமானத்தில் இவர் பூஷணம் பூட்டும் பொன் என்ற தொடர் வருவதைக் காண்க.

3. நவதானியம் எ முளைப்பாலிகை

உளுந்து, எள்ளு, கடலை, கொள்ளு, சாமை, தினை, துவரை, நெல்லு, பயறு என்ற 9 தானியங்களைத் தண்ணீரில் ஊறப்போட்டு முளைக்க வைத்தல் எ வாழ்க்கையின் தொடக்கம் செல்வத்தின் தொடக்கம் ஆகியவற்றின் அறிகுறி. முளைப்பாலிகை என்பதற்கு அங்குரார்ப்பணம் எ முளையிடுதல் என்பது பொருளாகும். கோவலன் எ கண்ணகி திருமணத்தின்போது வாழ்த்திய பெண்கள் கைகளில் விரித்த பாலிகை முளைக்குட நிரையும் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. மணவறைக்குப் பக்கத்தில் முளைப்பாலிகை வைப்பதையும் நோக்குக.

4. தும்பு பிடித்தல்

தும்பு என்றால் கயிறு என்று பொருள். சுவரில் வடிவத்தில் மங்கலத்தைக் குறிக்கக் கோலத்தால் தும்பு பிடிக்கின்றனர். இந்த வடிவத்தை நோக்கும்போது இறைவனை - கோயிலை திருமண வீட்டில் எழுந்தருளச் செய்வது போன்று தோன்றுகிறது.

5. மாற்றுக் கட்டுதல்

நீல விதானத்து நித்திலப் பூம்பந்தர்க்கீழ் கோவலன் கண்ணகி திருமணம் நடந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. நீலத்துணியை விதானமாக மேற்கூரைத் துணியாகக் கட்டி, முத்துப் பந்தலின் கீழ் திருமணம் நடத்தினர் என்பது இதன் பொருளாகும். மேற் கூரையில், - மேல் தளத்தில் உள்ள துaசியோ அல்லது பல்லி முதலிய பூச்சிகளோ மணமக்கள் மீது விழாமல் தடுக்க மாற்றுக் கட்டி இருக்கலாம்.

6அரசாணிக்கால்.

அரசன் ஆணைக்கால் என்பது அரசாணிக்கால் என மருவியதாக அறிஞர் கருதுவர். அரசன் ஆணையைக் காட்டும் அடையாளமாக அதனை முன்னிறுத்தித் திருமணத்தை அரசர் பின்னோராகிய நகரத்தார்கள் நடத்துகின்றனர். அரசன் ஆணைக்கால் ஆக இருப்பதால்தான் பவழப் பலகையில் வைத்துப் பாலூட்டும் சிறப்பைக் கொடுத்தனர் போலும். அதன் அறிகுறியாக இன்றும் அரசாணிக்கால் வைக்கும்போது பவளம் போட்டு பால் ஊற்றுகின்றனர். மேலும் திருமணம் நிறைவேறியபின் அரசாணிப் பொங்கல் வைத்து மரியாதை செய்கின்றனர். கோவலன் கண்ணகி திருமண முடிவில் அரசனை வாழ்த்தியதற்குச் சிலப்பதிகாரம் சான்றாக உள்ளது. மணவறை முடிந்ததும் தீ வலம் வரும்போது அரசாணியைச் சுற்றி வருதல் வேண்டும்.

7.மனை போடுதல்

பலபேறும் பெற்று, நன்றாக வாழ்கின்ற மங்கலப் பெண்கள் பலர் கூடி மனை அமைக்கிறார்கள் என்று பொருள். அவர்கள் அமைக்கும் மனையில் அமர்ந்து மணம்புரிய இருக்கும் மணமக்களும் அவ்வாறு நற்பேறுகளுடன் வாழ வேண்டும் என்பது நோக்கம்.

8.இசைபிடிமானம்

மணமக்களுடைய பெற்றோர்கள் திருமணத்திற்கு இசைவு தெரிவிப்பதற்கு உடன்படுகின்றதற்கு உரிய பிடிமானமாக எ சான்றுப் பத்திரமாக உள்ள ஒன்று.

9.பூரங் கழித்தல் - சக்தி வழிபாடு

10 பகவத் தியானம் - திருமண வாழ்வு சிறக்க இறைவனைத் தியானித்து வழிபடுதல்.

11. காப்புக் கட்டுதல்

மங்கல நிகழ்ச்சிகளில், அந்நிகழ்ச்சிக்கு உரியவர்கள் கையில் காப்புக் கட்டுவது பழந்தமிழர் வழக்கம். அகநாநுaற்றில் திருமண நிகழ்ச்சி பற்றிய பாடல் ஒன்றில் அறுகம்புல் தண்டுகளால் வெள்ளி நுaலில் இணைத்து காப்புக் கட்டப் பெற்றதாகப் குறிப்பொன்றுள்ளது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இக்காப்புக் கட்டப்பெற்றுப் பின் நிகழ்ச்சியின் முடிவில் அவிழ்க்கப்படும்.

12.மணமிடுதல்

பூவைக்கொண்டு, மணமக்களைத்தொட்டு நெருங்கிய உறவினர்கள் வாழ்த்துவது பூ மணமிடுதல் ஆகும். நெல்லைக் கொண்டு இவ்வாறு வாழ்த்துவது அரி (நெல்) மணமிடுதல் ஆகும். இதுவும் பழந்தமிழர் பழக்கம் என்பதற்கு அகநாநுaறு சான்றாக உள்ளது.

13.மாம வேவு

வேவு எடுத்தல் என்பது, தமது பெண் புகுந்த இடத்தில் சிறப்போடு வாழ, அவளுக்குத் தந்தை சொத்தில் பங்கில்லை என்ற மனக் குறையை அகற்ற, அவளுடன் பிறந்த ஆண் மக்கள், அவள் வீட்டில் நடைபெறும் ஒவ்வொரு விசேடத்திற்கும் அனைத்து உனவு வகைகளையும் தலைத்துaக்காகத் தாமே கொண்டு செல்வது ஆகும். இது தொன்மையான பழக்கம் ஆகும். இன்று சீர்வரிசைகளை ஊர்வலம் போல் தலைமேலேற்றிக் கொண்டு சென்று பின்னர் வீட்டில் தம் தம்

தலைமீது ஏற்றி, அறையினுள் சென்று பின்னர் இறக்கி வைப்பதைக் காணும் போது இதன் பொருள் விளங்கும்.

வேவு

ஆடி வேவு, கார்த்திகை வேவு, பொங்கல் வேவு, பிள்ளையார் நோன்பு வேவு, மாம வேவு எனப் பலவகைப்படும். பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொண்டு செல்வனவும், மாமன் முறையினர் தம் சகோதரிகளின் விசேடங்களுக்கும், அலுவல்களுக்கும் கொண்டு செல்வனவும் ஆகிய சீர் வரிசைகளை இது குறிக்கிறது. வேள்வு-விருப்பம்

14. ஆலத்தி

எண்வகை மங்கலங்களில் ஒன்று (நீராஞ்சனம்), கண்ணேறு (திருஷ்டி) கழிக்கும் ஒன்றாகவும் கருதலாம்.

15. தேங்காய்ச் சட்டி

தேங்காய், மஞ்சள், வெற்றிலை,பாக்கு முதலிய மங்கலப் பொருட்கள்.

16. தலைச் சேலையில் முடிதல்

பெண்ணின் தகப்பனார், மணமகனுக்கு வழிச் செலவு கருதித் தரும் முதல் பணப்பரிசு ஆகலாம்.

17. திருப்பூட்டுதல்

திரு என்றால் மகாலெட்சுமி. செல்வச் செழிப்புக்கு, மங்கல வாழ்வுக்கு உரிய தெய்வமாகிய மகாலெட்சுமி உருவம் பதித்த மங்கலத் தாலியை மணப்பெண்ணுக்கு அணியுமாறு எ பூணுமாறு செய்வதால், திருப்பூட்டுதல் என்று பெயர். திருப்பூட்டும்போது மணமகள் மணவறையின் மீது நிற்பதுதான் வழக்கம்.

18 தாலியும், மிஞ்சியும்

தலை நிமிர்ந்து வருபவன் ஆண். தலை குனிந்து வருபவள் பெண். தலை நிமிர்ந்து வரும் ஆடவன் கண்ணில் எதிரே வரும் பெண் திருமணமானவள் என்று தெரிவதற்காக அவள் கழுத்தில் தாலி. தலை குனிந்து வரும் பெண்ணின் கண்ணில் எதிரே வரும் ஆடவன் திருமணமானவன் என்று தெரிவதற்காக அவன் காலில் மிஞ்சி.

19. கெட்டி மேளம்

தாலி கட்டும்போது, அமங்கலமான வார்த்தைகள் எந்த மூலையிலும் கேட்கக் கூடாது என்பதற்காகத்தான் கெட்டி மேளம் கொட்டுகிறோம்.

20. சடங்கு

சடங்குத் தட்டிலுள்ள மங்கலப் போருட்களை எ சடங்கு செய்யும் பெண்டிர் தமக்குரிய பொருட்களை அந்த மணநாள் (நல்ல நாள்) முதலாகவே மணமகளும் துய்க்குமாறு அல்லது அனுபவிக்குமாறு செய்வதன் அடையாளமே சடங்கு செய்தலாகும்.

21. அக்கினி வளர்த்தல்

நெருப்பு மணமக்கள் இருவருக்கும் சாட்சி. ஆயிரம் சாட்சிகள் இருந்தாலும் அனைத்துக்கும் மேலான சாட்சி அக்கினி சாட்சி. நீ எனக்கு துரோகம் செய்தாலும், நான் உனக்கு துரோகம் செய்தாலும் இந்த நெருப்பு நம் மனதை எரிக்கும். துரோகம் செய்து வாழவேண்டுமென்று நாம் ஓடினால் நம் உடலையும் எரிக்கட்டும் என்பதுதான் அக்கினி சாட்சி.

22 எண்ணை, சீகைக்காய் தொட்டு வைத்தல் சாதம் போடுதல்

இவை அனைத்தும் மனைவி கணவனுக்குச் செய்யும் இல்லறக் கடமைகள். இவை மணநாளாகிய நன்னாளில் தொடங்கப் பெறுகின்றன.

23. கொண்டை மாலை மாற்றுதல்

கணவன், மனைவி தமக்குரியவற்றை இருவரும் ஒருவக்கொருவர் கொடுத்து பறிமாறிக் கொள்ளும் மனப்பான்மையை எ உள்ளக் கலப்பினை, உடற் கலப்பினை, காட்டும் அறிகுறியாகும்.

24. காப்புக் கழற்றிக் கால் மோதிரம் இடுதல்.

மாமியார் தன் அணிகலன்களை, உடைமைகளை மருமகளுக்கு நன்னாளில் கொடுக்கத் தொடங்குகிறாள்.

25. பணம் எழுதுவது.

திருமணத்தில் கலந்துகொண்ட உறவினர்கள் அனைவரும் தரும் அன்பளிப்பின் அடையாளம் மொய்ப்பணம் (ஒன்று கூடி எழுதும் பணம்) எழுதுவதாகும்.

26. மஞ்சள் நீராடல்

மணமக்கள் இருவரும் இணைந்து புனித நீராடல் எ தீர்த்தமாடலும் அந்நன்னாளில் தொடங்கப் பெறுகிறது.

27. குலம் வாழும் பிள்ளை எடுத்தல்

பிள்ளை எடுக்கிக் கொள்வது, பிள்ளைப் பேறும், பிள்ளையை வாழ்த்துதலும் நல்ல நாளில் தொடக்கம் பெறுகின்றன.

28. வலது கால் எடுத்து வைத்தல்

பூமியே வலப்புறமாகச் சுழல்கிறது என்பது விஞ்ஞானம். எனவே நானும் உலகத்தோடு ஒட்ட ஒழுகுவேனே அன்றி, உலகுக்கு எதிராக் போகமாட்டேன் என்று சத்தியம் செய்வதே வலது காலை எடுத்து வைப்பதாகும்.

| 16 பேறுகள் | | |
|---|---|---|
| | 1. நோயின்மை | 9. அறிவு |
| | 2. கல்வி | 10. நன்மக்கள் |
| | 3. தனம் | 11. வலிமை |
| | 4. தானியம் | 12. துணிவு |
| | 5. அழகு | 13. ஆயுள் |
| | 6. புகழ் | 14. வெற்றி |
| | 7. பெருமை | 15. நல்லூழ் |
| | 8. இளமை | 16. நுகர்ச்சி |

நகரத்தார் திருமணங்களில்

எழுதப்பெறும் இசை பிடிமான விபரம்

-----------ஆண்டு----------மாதம்---------தேதி

கல்வாசநாட்டில் இளையாற்றங்குடியான குலசேகர புரத்தில் ஒக்கூருடையான் அருணாசலஞ் செட்டி ராமநாதரோ, கேரளசிங்கவள நாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றுவரான வீரபாண்டிபுரத்தில் அரும்பாக்கூருடையான் கண்ணப்ப செட்டி நாராயணரோ அவர் மகன் சுப்பிரமணியனுக்கு இவர் மகள் வள்ளியம்மையை பாணிக்கிரஹுணம் பண்ணிக்கொண்டமைக்கு இவர் பூஷணம் பூட்டும் பொன் ஒன்பது ஆறு கல்லெடை பொன் பதிமுக்கழஞ்சு, இவர் சீதனம் கொடுக்கும் பொன் இம்மாறு இவ்வெடை பொன் ஆறுகழஞ்சு, வெள்ளி ஆறுகழஞ்சு, வெண்கலம் தராப்பலம் அறுபத்தொன்று வெள்ளாட்டிக்குப் பணம் முப்பதும், சீராட்டுச் சக்கரம் அறுபத்தொன்று இவ்வகைப்படி செய்வோம். இவர் நன்கொடை கொடுக்கும் பொன் ஐம்பது மோதிரம் விராகனிடை மூன்று இவர் உகந்துடைமையாகக் கொடுக்கும் பொன் வளையல் ஏழு கழஞ்சு இவ்வகைப்படி செய்வோம். இந்த நாள் இவரிடம் பொன் இவர் சொற்படி தெரிசனை பதின்முக்கழஞ்சு இவ்வகைப்படி செய்வோம். இந்த இசைகுடிமானம் எழுதினேன். கல்வாசநாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் ஒக்கூருடையான்.----------------

கையெழுத்து --------------------------------

மாப்பிள்ளை வீட்டார் கையெழுத்து ----------------

பெண் வீட்டார் கையெழுத்து -------------------

இதேமாதிரியாகவும் அவரவர் வழக்கப்படிக்கும் தங்கள் தங்கள் ஊர்ப் பிரிவுகளையும் பெயர்களையும் அடிக்கோடிட்ட இடத்தில் சேர்த்து எழுதவேண்டும்.

# 3 தீர்த்தம் குடித்தல்

அந்தந்த ஊர்களில் உள்ள கோயில்களில் ஐயரிடம் சொல்லி அர்ச்சனை செய்து சுவாமி சந்நிதியில் தீர்த்தத்தை (அபிஷேகப் பாலை) வைத்து தரச் செய்து வீட்டுக்குக் கொண்டு வரவும். வீட்டில் முன் கூட்டியே சுவாமி அறையில் நடு வீட்டுக் கோலம் போட்டு வைக்கவும். கோயிலில் இருந்து கொண்டு வந்த தீர்த்தத்தை சுவாமி அறையில் வைத்து விளக்கு ஏற்றி வைக்கவும். நடு வீட்டுக் கோலத்தில் தடுக்குப் போட்டு பெண்ணை அதில் நிற்க வைத்து மாமியார், நாத்தனார் தீர்த்தத்தை மூன்று முறை ஊற்றிக் கொடுக்கவும். மாமியார், நாத்தனார் அருகில் இல்லாத பட்சத்தில் கணவர் கொடுக்கலாம். கோயிலிலும் சந்நிதி முன் நடு வீட்டுக் கோலம் போட்டு இவ்வாறு செய்யலாம்.

# 4 பிள்ளைப் பிறப்பு



ஆஸ்பத்திரியிலிருந்து பிள்ளையைத் துaக்கிக்கொண்டு வீட்டுக்கு வரும்பொழுது கோலம்போட்டு ஆரத்தி எடுக்க வேண்டும். 5வது நாளிலும் 16வது நாளிலும் ஆரத்தி எடுக்க வேண்டும். (ஆரத்தி- தண்ணீரில் சிறிது மஞ்சள், சுண்ணாம்பு கரைத்து வெற்றிலையை மூன்றாகக் கிள்ளிப் போட்டுச் சுற்றவும்).

**பிள்ளைக்குக் காது குத்துதல்**

பிள்ளை பிறந்த 16வது நாள் அல்லது 30வது நாள் பிள்ளைக்குக் காது குத்தலாம். அன்றைய தினம் பிள்ளையைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டவும்.

# 5 பெண் பூப்பெய்துதல்



செய்தி அறிந்ததும் பாலில் கீரை விதை போட்டுப் பிள்ளைக்குக் கொடுக்கவும். மாமியார்,நாத்தனார் இருந்தால் அவர்களுக்குச் சொல்லிப் பிள்ளைக்கு தலைக்கு ஊற்றச் சொல்ல வேண்டும். நடுவீட்டுக் கோலம் போட்டு அதில் தடுக்குப் போட்டுப் பெண்ணை நிற்க வைத்து ஆரத்தி எடுத்த பிறகு பெண்ணுக்குச் சாப்பாடு போட வேண்டும்.

சாப்பாடு விபரம் - சோறு வடித்து, பருப்பு மசித்து கத்தரிக்காய், வாழைக்காய் அவிக்க வேண்டும். நெய் ஊற்றி முட்டை அவித்து வைக்கவும். 16 நாட்களுக்கு உளுந்தங்களி கொடுக்fக வேண்டும். (உடலுக்கு மிகவும் நல்லது) செய்முறை- உளுந்தை நன்றாக வறுத்துக் கொண்டு கொஞ்சம் அரிசியையும் பொரி செய்து சேர்த்து நைசாக அரைத்துக் கொண்டு வெல்லம் அல்லது கருப்பட்டி சேர்த்துக் கிண்டவும்.

சடங்கு கழித்தல் - அவரவர் வீட்டு வழக்கப்படி தோதுபோல் நாள் குறித்துச் செய்யலாம். மாமியார், நாத்தனார் இருந்தால் அவர்களைச் செய்யச் சொல்லவும். இல்லாத பட்சத்தில் அம்மாவோ மற்ற பெரியவர்களோ செய்யலாம்.

சடங்கு கழிக்கும் முறை - சடங்கு சுற்றும் சாமான்கள்.

(1) புட்டு அவிக்க வேண்டும். (2) களி. (3) கேப்பை அல்லது அரிசி மாவால் செய்த ரொட்டி. (4) சோறு, பருப்பு நெய், அவித்த முட்டை. (5) வேப்ப இலை 21 கணுக்கு. (1 முறைக்கு 7 கணுக்கு) (6) வேப்பங்குச்சி.

பெண்ணைத் தலை குளிக்கச் செய்தல்.

நடு வீட்டுக் கோலம் போட்டுப் பெண்ணை அதில் நிற்க வைத்தல்.

தலையில்1, தோள்ப்பட்டை 2, முழங்கை 2, பாதம் 2, ஆக 7 இடங்களில் ரொட்டியை வேப்ப இலை மேல் வைத்து அத்தையோ, அப்பத்தாவோ, அம்மாவோ வேப்பங்குச்சியால் தலை முதல் பாதம் வரை தட்டி விட வேண்டும். இவ்வாறு 3 முறை செய்ய வேண்டும்.

களி, புட்டு சோறுடன் கூடிய முட்டை ஆகியவற்றை தனித்தனியாகத் தலையைச் சுற்றி எல்லாவற்றையும் ஒரு பையில் சேகரித்து வீட்டுக்கு வெளியில் வைக்க வேண்டும்.

பெண்ணை மறுபடியும் தலை குளிக்கச் செய்ய வேண்டும். (அவரவர் விருப்பம்)

பிறகு பெண்ணைக் கோலத்தில் நிற்க வைத்து ஆரத்தி எடுத்தபின் திருநீறு பூசி விட வேண்டும்.

குறிப்பு சடங்கு கழிக்கும்போது சங்கு ஊத வேண்டும்.

# 6 புதுமனை புகுதல்




புது வீட்டைக் கழுவிக் கோலம் போட வேண்டும்.

வாசலில் மாவிலைத் தோரணம் கட்ட வேண்டும்.

நாதஸ்வர இசை ஒலி நாடாவைப் போடலாம்.

முதல் நாள் இரவு கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து வழிபட்டு, அப்போது கோயிலில் ஒரு குடத்தில் அல்லது செம்பில் தண்ணீர் எடுத்துப் பூ போட்டு இறை வழிபாடு செய்து வாங்கி வர வேண்டும். கோயிலுக்குச் சென்று தண்ணீர் கொண்டு வர இயலாத நிலையில் வீட்டிலிருந்தே தண்ணீர் எடுத்துச் செல்லலாம்.

புது வீட்டுக்குப் போகும்பொழுது அந்த நிறை குடத்தை எடுத்துச் செல்ல வேண்டும்.

புது வீட்டுக்குச் செல்லும்போது கொண்டு போக வேண்டிய பொருட்கள்.

மஞ்சள், பஞ்சு, பிள்ளையார், திருநீறு, குங்குமம், உப்பு, புளி, அரிசி, கல்கண்டு ஆகியவற்றைத் தனித்தனிக் கிண்ணங்களில் வைத்து ஒரு தட்டில் கொண்டு செல்ல வேண்டும்.

பழம், தேங்காய்,பூ, வெற்றிலை பாக்கு அடங்கிய தட்டு.

கணக்குப் புத்தகம் அடங்கிய கைப்பெட்டி.

விளக்கு, சங்கு.

குறிப்பு- ஒற்றைப்படையில் பொருள்கள் இருத்தல் அவசியம்.

பால் காய்ச்சுதல், பொங்கல் வைத்தல் முக்கியம்.

# 7 பொங்கல் விளக்குச் சட்டி



பொங்கலன்று விளக்குச் சட்டி ஏற்றுவது வழக்கம்.

விளக்குச் சட்டியில் வைக்க வேண்டிய சாமான்கள்

விளக்கு, பிள்ளையார், தேங்காய்மூடி, வெற்றிலைபாக்கு, வாழைப்பழம் 2, கரும்பு.

விளக்குச் சட்டிக்குக் கோலம் போட்டு மஞ்சள் கொத்து கட்ட வேண்டும்.

பொங்கல் படையலின் போது சட்டியில் விளக்கு எரிய வேண்டும். பிறகு மூடி வைத்து விடலாம். அடுத்த நாளாகிய மாட்டுப் பொங்கலன்று எடுத்து விடலாம்.

பொங்கலுக்கும் சங்கு ஊத வேண்டும்.

# 8 பிள்ளையார் நோன்பு



நடு விட்டில் கோலம் போட்டு பிள்ளையார் படம்/சிலை வைக்க வேண்டும்.

நெல்லுப்பொரி, எள்ளுப்பொரி, சோளப்பொரி, கம்புப்பொரி,அவல்பொரி ஆகிய 5ம் கிண்ணத்தில் வைக்க வேண்டும்.

கருப்பட்டிப் பணியாரம், வடை முக்கியம்.

இழை மா எ பச்சரிசி மாவில் கருப்பட்டிப் பாகினைச் சேர்த்துப் பிசைந்து முதல் நாளே வைக்க வேண்டும்.

வடிவங்கள் 5. நோன்பு நாளில் அந்த மாவைக் கிள்ளி எடுரித்துப் பிள்ளையார் வடிவில் சிறு சிறு வடிவங்களாகப் பிடித்து வைக்க வேண்டும். 21 மெல்லிய நுaல்இழைகள் கொண்ட திரியை அதனுள் வைக்க வேண்டும்.

வீட்டில் உள்ள பெரியவர் அந்த இழை செருகிய பிள்ளையாரை எடுத்து இழையை நெய்யில் தோய்த்துக் கொடுக்க வேண்டும். முதலில் அவர் பிள்ளையார் இழை என்று ஒன்று தமக்கு எடுத்துக்கொண்டு, பிறகு மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இறுதியில் அவர் தமக்குரிய இழை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கருவில் உள்ள பிள்ளைக்கும் தாயாரிடம் இழை கொடுக்க வேண்டும்.

திருக்கார்த்திகை முடிந்து 21 நாள் கழித்து (மார்களி மாதத்தில்) சஷ்டியும் சதயமும் கூடிய நாளில் பிள்ளையார் நோன்பு வரும்.

# 9 இறப்பு



வீட்டில் இறந்தால் உடனடியாக மருத்துவமனைக்கோ ஒரு மருத்துவருக்கோ தெரிவித்து அவர் வந்து பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்க வேண்டும். அதற்கு முன் எதுவும் செய்யக் கூடாது.

அந்தச் சான்றிதழை அக்கம் பக்கப் போலிஸ் நிலையத்தில் கொடுத்துத் தெரிவிக்க வேண்டும்.

உடலை வைக்க வேண்டிய இடத்தை முடிவு செய்து, அங்கு பாயோ மெத்தையோ போட்டு, அதன் மேல் கிடத்த வேண்டும்.

இறந்தவர் உடலில் வெள்ளைத் துணியைக் கிழித்துக் கால் பெருவிரல்கள் இரண்டையும் இணைத்துக் கட்ட வேண்டும். கைகள் இரண்டையும் மார்புக்கு நேரே ஒன்றன் மேல் ஒன்றாக வைத்துக் கட்ட வேண்டும். முதலில் கண்களை அழுத்தி மூடிவிட வேண்டும். தாவாய்க்குட்டையையும் தலையையும சேர்த்துக் கட்ட வேண்டும்.

உடலில் வெள்ளைத் துணியோ பட்டுப் புடவையோ போட்டு மூட வேண்டும். தலை வெளியில் இருக்க வேண்டும். நெற்றியில் திருநீரு பூச வேண்டும். வாவரசியாக இருந்தால் குங்குமம் வைக்க வேண்டும்.

தலைமாட்டில் ஒற்றை மூக்கு நிலைவிளக்கோ அரிக்கன் விளக்கோ ஏற்றி வைக்கவேண்டும்.

தேங்காய் உடைத்து விளக்கடியில் வைக்க வேண்டும். (வெற்றிலை பாக்கு வைப்பதில்லை). ஒரு சிறு பாத்திரத்தில் நெல்லும் ஒரு செம்பில் தண்ணீரும் வைக்க வேண்டும். பிறகு கற்பூர தீபம் காட்ட வேண்டும். பின்னர் திருவாசகம், தேவாரம் கொண்ட ஒலிநாடாவை இயக்கிப் பாடச் செய்ய வேண்டும். அது எந்த நேரமும் ஒலித்துக் கொண்டிருக்கலாம்.

உற்றார் உறவினர், நண்பர்களுக்குத் தெரிவித்தல் -

கோயிலுக்குச் சொல்லுதல்.

மன்றத் தலைவருக்குத் தெரிவித்து அவர் வழி மற்றவர்களுக்குத் தெரிவித்தல். (தகனம் செய்யும் நேரம் முடிவு செய்த பின்னர்)

இறுதிச் சடங்கு செய்யும் சேவை நிறுவனம்

(காஸ்கெட் கம்பெனி) ஒன்றை நாடி, அவர்களுடன் தகனம் செய்கிற நேரத்தை முடிவு செய்து, இறப்புச் சான்றிதழுடன் பொது மருத்துவமனைக்குச் சென்று தகனம் செய்யும் நேரத்தைக் குறிப்பட்டு நல்லடக்கச் சான்றிதழ் (Mortuary Burial Certificate) பெற வேண்டும்.

நாழிதழ்களுக்கு அறிவிப்புக் கொடுக்க வேண்டும். அதற்கு இறந்தவரின் பாஸ்போர்ட் அளவுப் படம் இருக்க வேண்டும். அறிவிப்பில் இறந்தவர் படம், பெயர், விபரம், முகவரி,தகன இடம், நேரம், அறிவிப்புக் கொடுப்பவர் பெயர் ஆகியவற்றையும் தெள்வாகத் தரவேண்டும்.

பஸ் தேவைப்பட்டால் நண்பர்கள், உறவினர்கள் மையமான இடத்திலிருந்து வருவதற்கு பஸ் ஏற்பாடு செய்யலாம்.

காஸ்கெட் கம்பெனியில் நமக்குத் தேவையான சவப்பெட்டியைத் தேர்ந்தெடுத்துக் கூறவேண்டும். மற்ற தேவையான பொருள்களை அவர்களே கொண்டு வருவார்கள்.

உடனடியாகத் தகனம் செய்ய முடியாத நிலையில் காஸ்கெட் கம்பெனியிடம் சொல்லி நல்லுடலுக்குக் குந்தகம் ஏற்படாமல் இருக்க ஆவன செய்ய வேண்டும்.(Embalm)

பச்சை குத்துதல். குளிப்பாட்டுவதற்கு முன்னர் இறந்தவரின் மகளோ பேத்தியோ, தலைமாட்டில் வைத்த நெல்லை ஓர் உரலில் (குழி அம்மியில்) போட்டுக் குத்த வேண்டும். அதன் வழி கிடைக்கும் அரிசியை வாய்க்கரிசி போட காஸ்கெட் கம்பெனியார் மூலம் மயானத்திற்கு அனுப்ப வேண்டும். விரும்புவர்கள் பொன்னரிசி (5) நகைக் கடையில் வாங்கிச் சேர்க்கலாம்.

குளிப்பாட்டுவதற்கு காஸ்கெட் கம்பெனியில் சொல்லி ஆள்களைக் கூட்டிவரச் செய்யலாம். இறந்தவரின் பிள்ளைகள் உடனிருந்து எண்ணை தொட்டு வைத்தல் முதலான சடங்குகளைச் செய்யலாம்.

குளிப்பாட்டி அலங்கரித்து வைத்த பிறகு பட்டம் சுற்ற வேண்டும். முதலில் ஆண்களும் அடுத்துப் பெண்களும் வரிசையாக நின்று மூன்று முறை சுற்றி வர வேண்டும். முதலில் இறந்தவரின் பிள்ளை செல்ல வேண்டும். அவர் கோடி வேஷ்டியோ புடைவயோ கையில் எடுத்து வந்து கடைசியில் பிரேதத்தின் மீது தலைமாட்டில் வைக்க வேண்டும். இறந்தவர், பெண்ணாக இருந்தால் தாய் வீட்டுப் பட்டம் சுற்றிக் கோடிப் பட்டு ( புடைவை) போட வேண்டும். ஆணாக இருந்தால் அவர் மனைவிக்குப் போட வேண்டும். அவர், பிரேதம் சென்ற பிறகு தலை முழுகி அப்புடவையை அணிந்து கொள்ள வேண்டும். கணவர் இறந்து மனைவி இருந்தால் பிரேதம் சென்ற பிறகு குளித்தவுடன் திருமாங்கல்யத்தையும் கால் மோதிரத்தையும் கழற்றிப் பாலுள்ள கிண்ணத்தில் போட்டு விளக்கடியில் வைத்து வணங்கிவிட்டு மறுபடியும் தலைமுழுகித் தாய் வீடு தந்த கோடியை அணிய வேண்டும். கணவருக்கு முன் மனைவி மரித்தால் மனைவியின் தாலி முதலான நகைகளை வீட்டிலேயே கழற்றி வைத்துவிட்டு மஞ்சள் கயிற்றில் ஒரு மஞ்சளைக் கட்டிக் கழுத்தில் போட வேண்டும்.

வீட்டிலிருந்து பிரேதத்தை எடுக்கும் போதும் மயானத்தில் இறுதிச் சடங்கு நடைபெறும் போதும் சிவபுராணம் ஓதுதல் வேண்டும்.

இறுதிச் சடங்கு முடிந்து இல்லம் திரும்பும் பிள்ளைகளுக்கு அங்குள்ள பெரியவர்கள் திருநீறும் வேப்பிலைச் சாறும் தயிரும் கலந்து கொடுக்க வேண்டும். இவற்றை முன்னரே தயாரித்து வைத்திருக்க வேண்டும்.

மயானத்திலிருந்து வீட்டுக்குள் நுழையும் போது கால் கழுவிவர வேண்டும். வாயிற் படிக்கு முன் ஒரு கம்பைப் போட்டு தாண்டிவரச் செய்ய வேண்டும்.

காடாற்றுதல் - மறுநாள் காலையில் காஸ்கெட் கம்பெனியருடன் சென்று இரண்டு டப்பாக்களில் அஸ்தி எடுத்துவர வேண்டும். அவற்றில் ஒன்றை உள்ளூர்க் கடலில் கரைக்கலாம். மற்றொன்றை விரும்பினால் காசிக்கு அனுப்பிக் கங்கையில் கரைக்க ஏற்பாடு செய்யலாம். காசி நகரச் சத்திர முகவரிக்குக் கடிதமும் ரூ 100 க்கு டிராப்ட்டும் அனுப்பி ஏற்பாடு செய்யலாம். முகவரி நகரக் கோயில்களில் இருக்கும்.

சவண்டி - வசதிக்கு ஏற்ப 5,7,11, அல்லது 16 வது நாள் ஐயரைக் கொண்டு சவண்டி கொடுக்க வேண்டும்.

காய்ச்சி ஊற்றிக் கொள்ளல் - உறவினர் அல்லது நண்பர் வீட்டுக்குச் சென்று ஒரு வேளை சாப்பிட்டு வரவேண்டும்.

(முற்றும்)